# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 அக்டோபர் 2002 பகுதி :10

திங்கள் இதழ்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 அக்டோபர் 2002 பகுதி :10

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


1. விலை கொடுத்து மீட்டினிக் காப்பார் யார்? ... 343

2. பதிப்பாசிரியர் ... 345

3. கடை திறவாய் ... 346
   பேராசிரியர் சுப. அண்ணாமலை

4. நாவலரின் நற்றமிழ்ப்பணி ... 349
   முனைவர் நெல்லை.ந.சொக்கலிங்கம்

5. பாடியதும் பாடப்பெற்றதும் ... 354
   முனைவர் வி.பழனியப்பன்

6. செயற்கரிய செய்வர் பெரியர் ... 359
   இரா.சதாசிவம்

7. பெயராய்வு அறிமுகம் ... 369
   டாக்டர் கி. இளங்கோவன்.

8. திரைமறைவில் நாடகப் படைப்பாளர்கள் ... 376
   முனைவர். அ.சிவக்கண்ணன்

# விலை கொடுத்து மீட்டினிக் காப்பார் யார்?

கொலைபுரிதல் பாவமெனத் தெரிந்துந் துப்பாக்கிகொண்டு சுட்டுஞ்
சிலைவளைத்துங் கொன்றுவிலங் கினம்பறவை தின்றுதிரி தீயர் போலாது
*உலை மெழுகாய் மனமுருகி யவற்றுயிரை உன்போல ஒருசற்றேனும்*
விலை கொடுத்து மீட்டினிக் காப்பார் யார்? பாண்டித்துரையே விளம்புவாயே!

*1911-ல் மு.ரா. அருணாசலக் கவிராயர் பாடியது.*

அருள்நெறி தழைய
இருள்நெறி கடிந்து
மன்னுயிர் மகிழப்
பன்னூல் திரட்டி
கற்றோர் இன்புற
மற்றோர் போற்ற
பொன்னும் பொருளும்
குன்றாது ஈந்த
அறிஞர் பெரும!
சிறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச்
சீரை புக்க
மேலோர் செய்தி
பறவைக் கிரங்கி
அறநெறி வழாது
நெஞ்சம் நெகிழ்ந்து
வேட்டுவன் பசிக்கு
வேண்டிய பொருளை
வேண்டியாங் கீந்து

பறவை யைமீட்டுப்
பறக்க விட்ட
செய்தி சாற்றும்
ஈரம் என்பநின்
சாயல் தோற்றம்
மென்மை என்பநின்
நெஞ்சின் பண்பு
பல்புகழ் நிறுவிய
தமிழ்ப் பாண்டிய!
பாண்டியர் போன்று
அருந்தமிழ்ச் சங்கம்
அரிதின் அமைத்த
சீர்சால் செல்வ!
பார்வான் சிறக்க
நின்புகழ் வாழிய!
நின்நெறி நின்று
நின்பணி போற்றும்
சேதுபதி குடிவழி
நீடுபுகழ் சிறக்க!

**பதிப்பாசிரியர்**

# பதிப்பாசிரியர்

நாவலர் ஓர் கொள்கை மறவர்; குறிக்கோள்வழி நின்ற சான்றோர். "புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; போற்றுபவர் போற்றட்டும்" எனத் தமிழும் சைவமும் வளர பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரும்பணியாற்றிய ஈழத்தமிழர் இப்பெரும கனாரைப் பற்றி வரலாற்று ஆசிரியர், "தம்மை எதிர்த்து நின்ற கிறித்தவர் தம்மை மதித்ததாகவும், எதிர்த்த சைவர் தம்மைத் தூற்றியதாகவும் நாவலரே கூறிக் கவலைப் படுகின்றார்" என்னும் கூற்று ஆழ்ந்து சிந்தித்தற் குரியதாகும்.

முனைவர்.வி.பழனியப்பன் எழுதியுள்ள "பாடியதும் பாடப் பெற்றதும்" என்னும் கட்டுரையில் காரைக்கால் அம்மையாருக்குப்பின் வந்த நாயன்மார்கள் அம்மையின் அடிச்சுவட்டைப் பொன்போல் போற்றியுள்ளதைச் சுவைபட எடுத்து வைத்துள்ளார்.

"செயற்கரிய செய்வர் பெரியர்" என்னும் கட்டுரை துறவு நெறியையும் அதன் பயனையும் விளக்குகிறது.

பேராசிரியர் டாக்டர். கி.இளங்கோவன் "பெயராய்வு அறிமுகம்" என்னும் கட்டுரை இத்துறையில் தமிழ் மாணவர்கள் ஆற்ற வேண்டிய ஆய்வுப் பணியை பன்முகநோக்கில் தெளிவு படுத்தியுள்ளது.

சென்ற இதழில் பேராசியர் முனைவர் அ.சிவக்கண்ணன் நாடகம் மறைந்து வருவதைச் சுட்டிக்காட்டினார். இந்த இதழில் திரைமறைவில் நாடகப் படைப்பாளர்கள் என்னும் கட்டுரையில் மனோன்மணியத்தை ஒட்டிய காலத்தில் நாவலாசியராகத் தமிழ் மாணவர்களிடம் அறிமுகப் படுத்தப்பட்ட அ.மாதவையாவின் நாடகப்பணியை நினைவுகூர்வதோடு பேராசிரியர் அ.சீனிவாசராகவன் படைப்பு இலக்கிய ஆசிரியர் செயகாந்தன் ஆகியோருடைய நாடகங்களையும் அறிமுகம் செய்கிறார்.

பேராசியர் டாக்டர் சுப. அண்ணாமலை தொடர் கட்டுரையாக திருவெம்பாவையில் ஐந்தாம் பாடலுக்குத் தரும் விளக்கம் பாலோடு தேன் கலந்ததுபோலத் தித்திக்கும்.

***புத்தாண்டு வாழ்த்துக்கள்!***

# கடை திறவாய்!

பேராசிரியர் சுப. அண்ணாமலை

*மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்*
*போலறிவோ மென்றுள்ள பொக்கங்களே பேசும்*
*பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்*
*ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்*
*கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்*
*சீலமும் பாடிச் சிவனே சிவனே யென்*
*றோல மிடினும் உணரா யுணராய் காண்*
*ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.*

இறைவனுடன் ஊடல் கொண்ட ஒரு பெண்ணை, அவளைப் போலவே இறைவன்காதலில் ஈடுபட்ட தோழிமார் எழுப்புவதாக இந்தப் பாடல் அமைகிறது.

உள்ளத்தில் ஊடலுடன், உறக்கம் கொள்ளாமல், இரவெல்லாம் பலவாறும் எண்ணிக் கிடந்து, பின்பு விடியற்காலையில் அயர்ந்து உறங்குபவளைத் தோழியர் எழுப்புகின்றனர்.

முந்திய நாட்களில், அவர்களுடன் அவள் பேசிய போது, இறைவனிடம் கொண்ட ஊடல் காரணமாக, அவனைச் சிறிது வெறுத்தாற்போல் பேசியிருக்கிறாள். அவளை முன் ஒருமுறை கூடி மகிழ்ந்த இறைவன், பின்பு வரவில்லை. அதனால் அவளுக்கு அவன் மீது கோபம். அதனால் தோழியரிடம், "அவனை எனக்குத் தெரியாதா? நன்றாகவே தெரியும்" என்று குறிப்பாகக் கூறியிருந்தாள். அவளை எழுப்பியபோது, இதை நினைத்துக் கொண்ட அவர்கள்,

"அடி பெண்ணே, சிவபெருமானை நான்அறிவேன் என்று கூறினாயே! ஊடலால், உன்னை உயர்த்திக் கொண்டு "நாம் அறிவோம்" என்று பேசினாயே! இப்போது நாங்கள் அவனுடைய புகழைப் பாடிக் கொண்டு, உன் வாசலில் வந்து நிற்பதை அறிந்தும் கண்ணைத் திறக்கவில்லை; கதவையும் திறக்கவில்லை இதுதான் அவனை அறிந்த அழகோ?

இங்குள்ள விக்கிரகங்களே அவன் அல்ல. அவை, அவன் பல முறை அன்பர்கள் மேல் கொண்ட கருணையால், அவர்கள் எண்ணத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு வந்த வடிவங்கள் திருமாலும் பிரமனும் அறிய முடியாத நிலையில் சோதியாக விளங்குபவன் அவன். அப்படிப்பட்டவனை நீ, 'நாம் அறிவோம்' என்கிறாய். இது பச்சைப் பொய் அன்றோ? உன் பேச்சு பாலும் தேனும் போல இனிமைதான்! ஆனால் பொய்களை அன்றோ கூறுகிறாய்!

"மால் அறியா நான் முகனும் காணா மலையினை நாம்
போல் அறிவோம் என்று, உள்ள பொக்கங்களே பேசும்
பல் ஊறு தேன் வாய்ப் படிறீ! கடை திறவாய்"

இறைவனை அறிவேன் என்று வாயளவில் பொய்யுரை கூறிவிட்டு, அவன் புகழ் பாடவேண்டிய காலை நேரத்தில் கண் மூடியுறங்குகின்றாயே.. இனிமேலாவது கண்ணைத் திறந்துபார். கதவைத் திற என்றனர். மேலும் பேசுகின்றனர்.

சிவபிரான் உன்னையும் எங்களையும் ஆட் கொண்டு காதலன் ஆனான். கடையவராகிய நம்மைக் கருணையினால் கலந்து மகிழ்வித்தான். அரியவனாகிய அவன் எளிவனாக வந்தான். மண்ணுலகத்து அறிஞரெல்லாம் - அவர்தம் அறிவெல்லாம் ஒன்று திரண்டாலும் அவனை அறிய முடியாது. விண்ணுலகத் தேவரும் அவனை அறிமாட்டார். மூவர் என்றும் முனிவர் என்றும் உள்ளோரும் அறியமாட்டார். பிற எவையும் அறிய மாட்டா.

"ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்"

இவ்வாறு, எவ்வுலகத்திலும், எவர் அறிவினாலும் கண்டுகொள்ள முடியாமல், கடந்து நிற்கும் பரம் பொருள், நாம் கண்டு கொள்ளும்படி வந்து ஆட்கொண்டான். காதல் தந்தான். நம் குற்றங்களையும் நீக்கினான்.

"கோலமும் நம்மை ஆட்கொண்டு, அருளி, கோது ஆட்டும்
சீலமும் காட்டிய"

நம்மை அடியவராக, காதலியராக ஏற்றுக் கொண்டு, தன்

பணியைச் செய்வித்துச் சீராட்டுகின்றான். அவனது திருமேனி அழகையும் அவனது திருவருட் குணங்களையும் நாங்கள் புகழ்ந்துபாடி நிற்கிறோம். அதுமட்டுமா?

இப்போது மறைந்து, பிரிந்து நிற்கும் நம் காதலன், மீண்டும் வரவேண்டும் என்று, 'சிவனே சிவனே' என ஓலமிட்டு அழைக்கின்றோம். உனக்கு அந்த உணர்வு இல்லையா? அதைவிட்டு, எங்கள் ஓலியைக் கேட்டும் உணர்கின்றாயில்லை.

"…. பாடிச் சிவனே சிவனே என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்"

என்கின்றனர். பிரிவுத் துயரம் அவளுக்கும் உள்ளமையால் தங்கள் ஓலத்தைக் கேட்டே அவள் உணர்ந்து தூக்கம் கலைந்து எழுந்திருந்திருக்க வேண்டும் 'உணராய்' என்று கூறி, தம் ஓலியைக்கேட்டும் அவள் துயில் உணரவில்லை என்பார், மீண்டும் 'உணராய்' என்றனர்.

சிவபெருமான் வராததைக் கொண்டு அவன்மேல் ஊடல்கொள்வது முறையன்று. நம்மிடம் கருணைபாலித்து வந்து ஆட்கொண்டவனை வெறுப்பது செவ்விது அன்று. அவ்வளவிற்கு நமக்குத் தகுதி இருக்கிறதா?

அவனை ஓயாமல் பாடவேண்டும். அவன் பணி செய்ய வேண்டும். சிவனே சிவனே என்று ஓலமிட வேண்டும் இவ்வாறு செய்தால் வருவான். இன்பம் தருவான். இதையன்றோ நீ எங்கள் செயலால் உணர்ந்திருக்க வேண்டும் என்று கூறி, அவளது ஊடலைத் தணிக்கின்றனர்.

# நாவலரின் நற்றமிழ்ப்பணி

முனைவர் நெல்லை.ந.சொக்கலிங்கம்

## நுழைவாயில்

*"நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்*
*சொல்லுதமிழ் எங்கே சுருதிஎங்கே - எல்லவரும்*
*ஏத்துபுராண வாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே*
*ஆத்தனறி வெங்கே அறை"*

என்று சி.வை.தாமோதரம் பிள்ளை போற்றிப்புகழ்வார். அத்தகைய சிறப்பிற்கும், சீர்மைக்கும் அருமைக்கும் பெருமைக்கும் உரியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஆவார். 1849இல் திருவாவடுதுறை ஆதீனத்தினால் 'நாவலர்' என்றுசிறப்புப் பட்டம் வழங்கப்பெற்ற செந்தமிழ்ச்சீலர். அவர் அருந்தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளை நினைந்து போற்றுவது இன்று தேவையான ஒன்றாகும்.

## அச்சுப்பணியும், அமைச்சுப்பணியும்

பதினாறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் அச்சுக்கருவிகள் வந்து விட்டன. எனினும் யாழ்ப்பாணத்தினின்றும் தமிழகம் வந்த ஆறுமுக நாவலர், கொழும்பில் ஓர் அச்சியந்திர சாலையை நிறுவினார். அம்மட்டோ! சென்னையிலே வித்யாநுபாலன அச்சியந்திரச் சாலையையும் நிறுவித் தமிழுக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் நிறைந்த தொண்டு செய்த புண்ணியர். மேலும் இவர் இலங்கையில் கந்தர்மட சைவப் பிரகாச வித்தியாசாலை போன்ற அமைப்புகளைத் தோற்றுவித்த தூயவர். தில்லையில் சைவப் பிரகாச வித்யாசாலை, சைவ சித்தாந்தக் கல்லூரி போன்ற பேரமைப்புகளை நிறுவித்தமிழுக்கு நிலைத்த தொண்டுசெய்து நீடுபுகழ் பெற்றவர் நாவலர். இன்றும் இவ்வமைப்புகள் நாவலர் பெருமானின் நற்றமிழ்ப்பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

## தமிழ்த் தொண்டில் தளராமை

சமயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஆறுமுக நாவலர் தமிழ் இலக்கிய, இலக்கணப் பணிகளிலும் ஆர்வம் மிகக் கொண்டு விளங்கியுள்ளார். இலக்கண வினா விடை, இலக்கணச் சுருக்கம், கதிர் காம சுவாமி கீர்த்தனைகள், சிதம்பர மான்மியம், திருவிளையாடற் புராண வசனம், பாலபாடம் (4 தொகுதிகள்), பெரியபுராண வசனம், பெரியபுராண சூசனம் என இவர்தம் இலக்கியப் பணி இமயம்போல் உயர்ந்து நிற்கின்றது.

நாவலர் பலநூல்களுக்கு உரை இயற்றியுள்ளார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருச்செந்தில் நீரோட்டயமக அந்தாதி. திருமுருகாற்றுப்படை, நன்நெறி, நல்வழி இணைய நற்றமிழ் நூல்களுக்கு நாவலர் நல்லுரை இயற்றிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

தமிழும் சைவமும் ஆறுமுகநாவலர்தம் இரு கண்களாகவே விளங்கின. இவ்விரு கண்களின் வளர்ச்சிகருதியே தாம் திருமணமே செய்துகொள்ளவில்லை என்றால் இவர்தம் பணியின் உயர்வும் மேன்மையும் சிறப்பும் சீர்மையும் இனிது புலனாகும்.

கலித்தொகையைக் 'கூலித்தொகை' என்றும், பத்துப்பாட்டைப் 'பித்துப்பாட்டு' என்றும் அச்சுப்பிழையுடன் வெளியிடும் காலம் நம் காலம். வாய்ப்புகளும், வசதிகளும் கிடையாத 19 ஆம் நூற்றாண்டில் பிழையற்ற செம்பதிப்புகளை வெளியிட்ட பெருமை நாவருக்கே உரியதெனல் சாலும். விலைமலிவுப் பதிப்பு என்று சொல்லிப் பிழை மலிவுப் பதிப்புகள் ஏவுகணை வேகத்தில் இன்று வெளிவருகின்றமை கண்கூடு. ஆயின் நாவலரோ உவமானசங்கிரகம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, சேதுபுராணம், திருவாசகம், கந்தபுராணம் போன்ற பழந்தமிழ்ப் பனுவல்களை நன்கு பரிசோதித்துப் பிழையின்றிப் பதிப்பித்துள்ளார் எனில் அப்பணியைத் தமிழ்கூறு நல்லுலகம் நினைந்து போற்றுவது கடமையன்றோ!

ஆறுமுக நாவலர் தம் தந்தையார் கந்தபிள்ளை இலங்கையில் தமிழ்நாடக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளார். இராம

விலாசம், சந்திரகாரம் என 20 நாடகங்களைப் படைத்துப் பைந்தமிழ்த் தொண்டு செய்தமையினையும் நாம் நினைவு கொள்ள வேண்டும்.

## தலைசிறந்த தமிழ்ப்பணி

"இலக்கண வழு இல்லாத தூய எளிய நடையை முதன்முதல் கையாண்ட பெருமை நாவலருக்கு உரியது. 'வைதாலும் வழுவின்றி வைவாரே' என்று இவரைப்பற்றி ஒருவர் புலம்பியதாய்க் கூறுவர்" என்று சோமலெ 'வளரும்தமிழ்', (ப.34) என்ற நூலில் குறிப்பிடுவார்.

நாவலர் 'Mathodist Catcheism' என்னும் ஆங்கிலத்தில் அமைந்த சமய நூலைப் பின்பற்றித் தமிழில் 'சைவ வினா-விடை' என்ற நூலை எழுதினார் என்பர். இவர்தம் தமிழ் நடை எளிமையும் இனிமையும் கூடியது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தியை இவர் நடையில் காண இயலும். ஓர் எடுத்துக்காட்டைக் காண்போம்.

"உலகத்திற்குக் கருத்தா யார்?

சிவபெருமான்,

சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர் எல்லாம் வல்லவர்" (சைவ வினா-விடை) இவர்தம் தமிழ் நடைச் சிறப்பினை எண்ணிய பரிதிமாற் கலைஞர் 'வசன நடை கைவந்த வல்லாளர்' என இவரைச் சிறப்பிப்பார். இவர் வாழ்ந்த காலச்சூழல் பிற மொழிக் கலப்புடையதாக விளங்கிற்று. எனவே இவர்தம் தமிழ் நடையில் வடசொற்கள் மிகுதியும் கலந்து வரும். கவர்னர், கவர்மெண்டு, ஏசண்டு, கிறிமினல் போன்ற பல ஆங்கிலச் சொற்கள் பயிலும் இவர்தமிழ் நடையில்.

நாவலர் மனத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வந்த கிறித்துவ சமயப் பிரச்சாரம் ஓர் எழுச்சியை ஏற்படுத்திற்று. ஆயினும் சைவப் பெருமக்கள் பரம்பரை வழக்கம் என்ற நிலையிலிருந்து சிறிதும் மாறாத காலத்தில் நாவலர் சைவத் தொண்டினையும்

தமிழ்த் தொண்டினையும் செய்துள்ளார். முனைவர். ஆ.வேலுப்பிள்ளை, "நாவலரின் கடைசிப் பிரசங்கத்தை நோக்கும் போது நாவலரை ஒரு பக்கம் கிறித்தவரும் மறுபக்கம் சைவப் பரம்பரையினரும் எதிர்த்து நின்றது தெளிவாகத் தெரிகிறது. எதிர்த்து நின்ற கிறித்தவர் தம்மை மதித்ததாகவும், எதிர்த்த சைவர் தம்மைத் தூற்றியதாகவும் நாவலரே கூறிக்கவலைப் படுகிறார். எனவே சைவ சமயத்தவருள் ஒரு சாராரின் ஆதரவுடனேயே நாவலர் சைவத் தமிழுக்குப் போராட வேண்டியிருந்தது" (தமிழர் சமய வரலாறு, ப.220) என்று கூறுவது இவண் நினையத்தகும்.

நாவலர் ஒரு முறை கடைக்குச் சென்று தேங்காய் விலையைப் பின்வருமாறு விசாரித்தாராம், "அம்மையே! நீவிர் தெங்கங்காய்களை மாறல் எங்ஙனமோ?" என்று கேட்டாராம். இவ்வாறு நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல உண்டு. இவர் வாழ்விலே!

துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகச் சைவ சமய நிலைகளை வெளிப்படுத்தினார். நாவலர் ஒரு நல்ல உரையாசிரியர் என்பது இவர் இயற்றியுள்ள நன்னூல் காண்டிகை உரையின் வழிப் புலனாகும். கருத்து, பதப்பொருள், காட்டு, வினா, விடை என வரும் ஐங்காண்டிகை உறுப்புகளும் பொருந்துமாறு உரை வகுத்துள்ளார். இவர்தம் இலக்கிய உரைகளுக்குச் சான்றாக அமைவது 'ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூலமும் உரையும்' என்பதாகும்.

"ஙப்போல் வளை" என்பதற்கு நாவலர் கூறும் உரையைக் சற்றுச் சுவைத்தால் இது புலனாகும்.

"ஙகரமானது அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்ற சொல்லுக்குக் காரணமாய்வரும். அதன் வருக்கங்களாகிய ஙா, ஙி, ஙீ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ என்கிற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும் ஙகரத்தின் பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கில் வழங்குகிறார்கள். அது போலவே, நீ கல்வி, செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னைத் தழுவுதலன்றி உன்பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாகும்" என்று பொருந்தும்

உரை கூறும் போக்கு இவண் எண்ணி மகிழத்தக்கது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மழவை மகாலிங்க ஐயர், சிவசங்கர பண்டிதர், வள்ளலார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற சான்றோர்களின் சமகாலத்தவர் ஆறுமுக நாவலர் ஆவார். விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்த பெருமைக்கு உரியவர் நாவலர். 18.12.1822 முதல் 5.12.1879 வரையிலும் இம்மண்ணில் வாழ்ந்து வண்டமிழுக்கு வளம் சேர்த்த ஆறுமுகநாவலர் பெருமையை நன்குணர்ந்த வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள் பின்வருமாறு போற்றிப் புகழ்வது சாலப் பொருந்தும்.

*"ஈழ முதற்றென்னாடுண் மூழ்கிப் போகாமல்*
*வாழவைத்த சைவ மருந்தாய நாவலரைக்*
*கூழனையா ரேங்க நின்பாற்கூட்டிய வாறென்னையோ*
*வாழமுந்நீர் நஞ்சுண்டு அழியாத சிவமே!"*

---

*செந்தமிழுக்கு வந்த வாழ்த்து*

*செந்தமிழே போற்றி!*

செந்தமிழ் இதழின் தரம் கூடிப் புதுப்பொலிவுடன் வருகின்றது. பாராட்டுக்கள். தமிழ்ப்பாண்டித்துரைச்தேவர் மகுடமாக இருக்க, பேராசிரியர்களான கதிர்மகாதேவன், இராம.சுந்தரம், அ.சிவகண்ணன், சுப. அண்ணாமலை, க.விசயன் ஆகியோர் தமிழ்ச்சிந்தனை மலர்களைத்தூவி இதழை நிரப்பியிருந்தனர். கணினிச் சித்திர எழுத்துக்கள் கருத்தையும் கவர்ச்சியையும் அள்ளிக்கொட்டியுள்ளன.

செந்தமிழே போற்றி!
18.12.2002
ஈ.கி.இராமசாமி
தமிழ்ப்பேராசிரியர்
மதுரை-14.

---

# பாடியதும் பாடப்பெற்றதும்

முனைவர் வி.பழனியப்பன்
தமிழ்இணைப் பேராசிரியர்
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஒரு நூல் தான் தோன்றிய காலத்திலும் தனக்கு முன்னும், எழுந்த நூற்கருத்துக்களை வெளிப்படுத்துதல் இயல்பு அந்நூலாசிரியர் தமக்கு முன் தோன்றிய தம் காலத்து எழுந்த நூல்களை நேரடியாகப் படித்தறிந்ததினால் எடுத்தாளப்பட்டன வாயிருக்கலாம். அல்லது அவை அவர் காலத்து வழக்கில் பரந்து விரிந்த பயிற்சியினால் அறியப்பட்டனவாயிருக்கலாம். திருக்குறள் தம் காலத்து முன்னைய மற்றும் தம் காலத்திய நூல்களை, சமுதாயத்தை நன்கறிந்து பெறப்பட்ட அறக்கருத்துக்கள் அமையப் பாடப்பட்டதாகும். அதன் கருத்துக்களைப் பின்வந்தோர் காலந்தோறும் எடுத்தாண்டுள்ளனர். 'அறம் பாடிற்றே,' எனத் திருக்குறள், காப்பிய ஆசிரியரால் குறிப்பிடப் பெற்றது. இல்லறம் காக்கும் நல்லறப் பெண்டிர் பெய்யெனப் பெய்யும் மழை என்பதும் கப்பிய இலக்கியத்துள் காட்டப்பெற்றுள்ளது. இதுபோல இலக்கியம் படைத்த பலரும் தமக்கு முன்னர் எழுந்த இலக்கியக் கருத்துக்களை எடுத்தாண்டுள்ளனர். இவ்வகையில் காரைக்காலம்மையாருக்கு முன்பின்வந்தோர் அவர் பாடற்கருத்துக்களை எடுத்தாண்டுள்ளனர்.

இவ்வகையில் காரைக்காலம்மையார் குறட்கருத்துக்களை ஏற்றுப் பாடியதும் அம்மையாரின் கருத்துக்கள் அவருக்கப்பின் வந்தோரால் ஏற்றுப் பாடப் பெற்றதும் இக்கட்டுரையில் விளக்கப் பெறுகின்றன.

## பாடியது

காரைக்காலம்மையார் இல்லறம் பேணிய காலத்தில் கணவனால் தெய்வமெனக் கருதித் தனித்து விடப்பட்டவர். எனவே கணவன் நீங்கியமையால் தன் இளமைச் சதைப்பற்று வடிவினை இறையருளால் நீக்கப் பெற்று என்புருவை வேண்டிப் பெற்றவர். இறைவனால் அம்மையே என்றழைக்கப்பெற்றவர். இறைவனைப் பாடுவதும், இறையருள் வேண்டுதலும் அவருக்குப் பாடுபொருளாயின. அறத்தைப் பாடுங்காலும் முற்றும் துறந்து

பற்றற்று நிற்கும் பரமார்த்த நிலையையே பாடினார். அவ்வாறு பாடுங்கால் திருக்குறட் கருத்துக்கள் அமையவும் பாடல்களைப் பாடியுள்ளார்.

*"இனியோ நாம் உய்ந்தோம் இறைவன்தாள்*
*சேர்ந்தோம்*

*இனியோர் இடர்இல்லோம் நெஞ்சே - இனியோர்*
*வினைக்கடலை யாக்குவிக்கும் மீளாப் பிறவிக்*
*கனைக் கடலை நீந்தினோம் காண்"*

என்னும் அற்புதத் திருவந்தாதிப் பாடலில் இறைவன் தாள் சேர்ந்தததனால் இனி இடர் இல்லாமற்போகும் என்பதும் இறைவனடி சேர்ந்தமையால் பிறவிப் பெருங்கடலை நீந்தி விட்டோம் என்பதும் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவ்விரு கருத்துக்களும் கீழ்வரும் குறட்பாக் கருத்துக்களாகும்.

*"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல"*

என்ற குறட் கருத்தும்

*"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவ னடிசேரா தார்"*

என்ற குறட்கருத்தும் அற்புதத் திருவந்தாதியில் ஒரு சேர அமைந்துள்ளன. இறைவனது சரணார விந்தங்கள் சேர்ந்தவர்க்கு இருவினையும் சேராது எனக் காரைக்காலம்மையார் பாடுவார்.

*"காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்*
*மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல*
*அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்*
*சரணார விந்தங்கள் சார்ந்து"* (அரணார்-திரிபுராதிகள்)

என்னும் அம்மையார் பாடல் இறைவன் புகழ் புரிந்தார்க்கு இருவினையும் சேரா என்ற குறள் கருத்தை அறிவுறுத்துவதாகும்.

*"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு"*

என்ற குறளே மேற்காட்டப் பெற்ற அற்புதத் திருவந்தாதியில் எடுத்தாளப்பட்டது.

இவ்வாறு அம்மையார் பிறநூற் கருத்துக்களை எடுத்தாண்டுள்ளது போல, அம்மையாரின் பாடற் கருத்துக்களை அவருக்குப் பின் வந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேரமான் பெருமாள் நாயனார், சிவஞான சித்தியார், பட்டினத்தார் முதலியோர் குறித்துள்ளனர்,

**பாடப்பெற்றது.**

**அப்பர்**

ஒன்றே நினைத்திருந்து ஒன்றே துணிந்திருந்தார் அம்மையார்

"................ *அவர்க்கல்லால் மற்றொருவர்க்*
*காகாப்போம் எஞ்ஞான்று மாள்*"

என்ற அம்மையார் கருத்தைத் திருநாவுக்கரசர்,

"*சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்*"

எனப்பாடுவார்.

"*யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்*" என்னும் அம்மையார் கருத்தினை ஏற்றுத் திருநாவுக்கரசர்.

"என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே"

என உரைப்பார்.

"நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்து"

என்னும் அம்மையார் கருத்தை ஒட்டி.

"பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
*நாமாரக் கும்பிட்டுக் கூத்துமாடி*"

எனப் புகழ்ந்து கூறுவார். இவ்வாறு அம்மையார் கருத்துக்கள் திருநாவுக்கரசர் பாடல்களில் பாடப்பெற்றன.

ஞானசம்பந்தர்

"*அறிவானுந் தானே அறிவிப்பானுந்தானே*
*அறிவாயறி கின்றான் தானே*"

இப்பாடல் இறைவனை எங்குந் தேடுதல் வேண்டாம். அவனே அறிவானும், அறிவிப்பானும், அறியும் பொருளாயும் இருக்கின்றான் என்னும் கருத்தமைந்ததாகும். இதனை ஒத்ததாக ஞானசம்பந்தர் பாடிய,

"*ஏதுக்களாலு மெடுத்த மொழியாலும் மிக்குச்*
*சோதிக்க வேண்டா*"

என்னும் பாடல் அமைந்துள்ளது. இறைவனைக் காரண காரியங்களாலும் சொல்லாலும் சோதிக்க வேண்டாம். அறிந்தவனும் அரியப்படுபவனும் அவனே என்பது இதனால் உணரப்படும்.

## சுந்தரர்

இறைவனுக்கே ஆளாவதல்லால் மற்றெவர்க்கும் ஆளாக மாட்டோம். அவர்க்கே நாம் அன்பாவோம் என்னும் அம்மையார் கருத்து.

"*மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை*
*வேண்டாதே*"

எனச் சுந்தரர் பாடல் கருத்தாக வளர்ந்தமைந்துள்ளது.

## மாணிக்கவாசகர்

"*யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்*
*யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்*"

என அம்மையார் கூறும் பகுதி,

"*நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம*
*வெனப்பெற்றேன்*
*தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்*
*தானே வந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்*
*செய்தான்*"

எனத் திருவாசகப் பகுதியில் கருத்து வளம் பெற்றமைந்துள்ளது.

## சேரமான் பெருமாள் நாயனார்

"*காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்*
*வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்*
*தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு*
*வீங்கிருளே போலும் மிடறு*"

என அம்மையார் ஒருநாளின் கூறுகளை இறைவனின் மேனி, வெண்ணீறு, மிடறு இவற்றிற்கு ஒப்புமைப்படுத்திக் கூறுவார். இதன் வளர்ச்சியாக சேரமான் பெருமாள் நாயனார் தெரிவையாகிய ஒரு பெண்ணை ஒருநாளின் பல கூறுகட்கு ஒப்புமைப்படுத்திக் கூறுவார்.

## சிவஞான சித்தியார்

"*அறிவானுந் தானே அறிவிப்பானும் தானே*
*அறிவா யறிகின்றான் றானே - அறிகின்ற*
*மெய்ப்பொருளும் தானே விரிசுடர் பாராகாயம்*
*அப்பொருளுந் தானே யவன்*"

என்ற பாடற் கருத்திற்கேற்ப இறைவன் ஒன்றாய், வேறாய். உடனாய் இருப்பதனை,

"உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் ஒளியுமாய் ஓங்கி" எனத் தொடங்கும் பாடலில் சிவஞான சித்தியார் கூறுகிறது.

## சிவஞானபோதம்

*"பண்புணர மாட்டேன் நான் நீயே பணித்துக் காண்"*
என்னும் அம்மையாரின் பாடற் கருத்தை ஒட்டியே

*"காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்*
*அயரா அன்பின் அரன்கழல் செலுமே"*
எனச் சிவஞானபோதம் சித்தாந்தமாயுரைக்கும்.

## பட்டினத்தார்

*"இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி*
*இறைவனே ஈன்டிறக்கம் செய்வான்"*
என்னும் அம்மையாரின் கருத்தொற்றி

*"ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்*
*நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி"*
எனப் பட்டினத்தார் பாடுவார். ஆக்குவதும் அழிப்பதும் இறைவன் செயலே என்னும் அம்மையார் கருத்தே பட்டினத்தார் கூறும் இறைவனின் பல்வேறு வினைகளாக அமைகின்றன.

ஒரு சிறந்த கவிதை நூல் விளக்குகின்ற கருத்துப் பொருட்கள், கலை நலம் ஆகியவை திரட்சியுடன் துலங்க வேண்டும் என்பர். காரைக்காலம்மையாரின் பாடல்கள் முழுமுதற்கடவுளென எண்ணப்படும் இறைவனைப் பாடுபொருளாகக் கொண்டமைந் துள்ளன. அணுவளவும், அப்பொருளினின்றும் விலகாது அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பன இறைவனைப் பாடியுள்ளன.

இறைவனது வடிவம், அணிந்துள்ள பொருள்கள், அடியார்க்கு அருளும் திறம், ஆற்றல் பிறவாத்தன்மை, சார்ந்த உயிர்களை ஆட்கொள்ளுதல், அவன் புகழ் பாடுவோரின் மனநிலை முதலியவை பக்தி இலக்கியங்களில் இடம்பெறக் கூடியவை. அவற்றில் மாற்றம் இல்லை. எனவே சிவனைப் பாடுபொருளாக்குங்கால் எவர் பாடினாலும் அவையே உட்பொருள் ஆவதனால் பக்தி இலக்கிய வரிசையில் தொன்மையாய் அமைந்த அம்மையாரின் நூல்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சி, உள்ளடக்கம், வெளிப்பாடு பின்வந்தோராலும் மேற்கொள்ளப்பட்டு மேலே கூறியவாறு வெளிப்படுத்தப் பட்டுள்ளன எனலாம்.

# "செயற்கரிய செய்வர் பெரியர்"

*இரா.சதாசிவம்*

பொருளுக்கும் இன்பத்துக்கும் அடிப்படை அறம் என்பர் சான்றோர். அறம், இல்லறம் துறவறம் என இருபாற்படும். திருவள்ளுவர் அறத்துப்பாலை நான்கு இயல்களாகப் பகுத்துள்ளார். பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறத்துப்பால் பகுக்கப்பட்டுள்ளது. பாயிரம் முன்னுரை போலவும் ஊழ் இறுதி நிலை, முடிவாகவும் கொள்ளத்தக்கது.

பாயிரத்துள் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் பகுதியுள் கடவுளை வழிபடும் ஒழுக்கம் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி அதன் சிறப்பை அறிவுறுத்துகின்றார். அது உலகத்து அனைவருக்கும் பொதுவாகிய உண்மையாகும்.

அடுத்து வான்சிறப்பு என்ற பகுதியுள் மழையின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார். மழை இன்றேல் உலகியல் இல்லை; பொருள் வாழ்க்கை சிறக்காது. நீரின் முக்கியத்துவம் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைந்திருப்பதை இன்று நாடு நன்கு உணர்ந்துள்ளது. பொருளும் இன்பமும் சிறக்க நீரின் துணை இன்றியமையாததாகும். எனவே ஆசிரியர் திருவள்ளுவர் வான்சிறப்பை எண்ணிப் போற்றுகின்றார்.

மூன்றாவதாக நீத்தார் பெருமை பேணப்படுகிறது. இவ்வுலகப்போகங்களைத் துறந்தவர் பெற்றி எடுத்துரைக்கப்படுகிறது. உலக நன்மையைக் கருதியும் தன்னுடைய ஈடேற்றத்தைக் கருதியும் ஒருவன் போகங்களைப் புறந்தள்ளி உள்ளும்புறமும் உழைத்தாக வேண்டும். அத்தகைய சான்றோர் நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாவர். அவர் பெருமையை வியந்து உலகம் போற்றும் கடப்பாடுடையது. அத்தகைய முயற்சியாளர்களின் முயற்சி அரிதினும் அரிதாகும்.

இதனை உணர்ந்த மாணிக்கவாசகர் உலக இச்சைகளில் ஆழவேர் விட்டு மயங்கிக் கிடப்பதிலிருந்து விடுபட வேண்டி இறைவனிடம் நீத்தல் விண்ணப்பம் தருகின்றார்.

"கார் உரு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேர் உருவேனை விடுதிகண்டாய்', என

அவர் வேண்டுவது நீத்தார் பெருமையின் உள்ளீட்டை உணர்த்துவதாகும். மணிவாசகரும் திருவள்ளுவரும் நீத்தார் பெருமையை உணர்ந்து போற்றுகின்றனர். திருவள்ளுவர் நீத்தார் பெருமையுள்

'செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்' என்பார்.

பெரியவர் சிறியவர் என இரண்டு இனத்தைச் சுட்டுகிறார். இதனை விளக்கவந்த உரையாசிரியர்களுள் மணக்குடவர், செயற்கு அரியன - இயமம் நியமம் முதலாயின; இவ்வதிகாரம் நீத்தார் பெருமை என்று கூறப்பட்டதாயினும், துறந்த மாத்திரத்தானே பெரியர் என்று கொள்ளப்படார்; செயற்கரியன செய்வாரே பெரியர் என்று விளக்கம் தருவார். எனவே நீத்தல் மாத்திரம் பெருமை சேர்க்காது; இயமம், நியமம் முதலான எண்வகை யோக நெறிமுறைகளையும் கடைப்பிடித்து ஒழுகுதல் திருவள்ளுவரால் வலியுறுத்தப்படுகிறது என்பதை மணக்குடவர் தெளிவாக அறிவுறுத்துகின்றார். இதனைப் பரிமேலழகரும் வலியுறுத்துகின்றார்.

*எண்வகை யோகப்பயிற்சிகள் யாவை?*

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும்.

இவற்றுள் இயமம் என்பது கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, வெஃகாமை, பொறிவாயில் ஐந்தவித்தல் என்னும் ஐந்துமாம்.

நியமம் என்பது தவம், சௌசம், தத்துவநூல் ஆராய்ச்சி பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வவழிபாடு என்னும் ஐந்தும் ஆகும். சௌசம் என்பது உடலை நீரினாலும் மனத்தை மெய்யுணர்வினாலும் தூய்மை செய்தலாகும்.

ஆசனம்: உடலையும் மனத்தையும் செந்நெறிப்படுத்தும்

உடற்பயிற்சிகளை இருந்து, நின்று, படுத்துச் செய்யும் ஆசனவகைகளாகும்.

பிராணாயாமம் என்பது மூச்சுப் பயிற்சியாகும். இரேசகம், பூரகம், கும்பகம் என விரிவுபடும் தக்க இடத்தல் பிராணாயாமப் பயிற்சியை முறையாகக் கற்றல் வேண்டும்.

*பிரத்தியாகாரம்:*

பொறிகளை விசயங்களில் செல்லா வண்ணம் இந்திரியங்களை தடுத்து உள்நோக்கி இழுத்தலாகும்.

*தாரணை:* தைலதாரை போன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட்டு இருத்தலாம்.

*தியானம்:* கடவுளிடத்துச் செல்லும் அந்தக் கரணத்தின் பிரவாகம் ஆம்.

*சமாதி:* உண்டாயிருக்கும் சம்ஸ்காரங்களின் (வாசனைகளின்) ஒழிவும் அடங்கி இருக்கும் சம்ஸ்காரங்களின் வெளிப்பாடும் உண்டாகி அந்தக்கரணம் ஒருமுகமாய்ப் பரிணமித்து இருத்தலாம்.

மேற்கூறிய எண்வகை யோகப்பயிற்சிகளை நாள்தோறும் கடைப்பிடித்து நடத்தும்தவ வாழ்க்கையே துறவறத்தை அளக்கும் அளவு கோலாகும். எனவே பெரியார் என்பதன் இலக்கணத்தைச் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற தொடரில் விளக்கும் உரையாசிரியர்கள் மணக்குடவரும், பரிமேலழகரும் மேற்கூறியவாறு தெளிவுபடுத்துகிறார்கள்.

திருமணம் செய்து கொள்ளாமல் புறவேடங்களாகிய காவியாடை, பிற அங்கிகள், அடையாளங்கள் மட்டும் நீத்தாருக்குப் பெருமை தருவதில்லை என்பதைத் திருவள்ளுவர் வழிநின்று உரையாசிரியர்கள் வலியுறுத்துகின்றனர். துறவிக்குரிய இயமம் நியமம் முதலான எண்வகை (அஷ்டாங்க யோகங்கள்) யோக நெறி நிற்றல் பெருமிதம் தரும் என்பதும் அந்நிலை மறந்து துறவுக்கோலம் புனைதல் சிறுமை என்பதனால் சிறியர் என்றும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

நீத்தார் பெருமையைத் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குவது போலவே இல்லறத்தான் பெருமையையும் இல்லறவியலில் விளக்குகின்றார். இல்வாழ்வானுக்குச் சிறப்புத்தரும் பேறுகளாக, இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந் நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை என அதிகாரத் தலைப்பிட்டு ஆசிரியர் திருவள்ளுவர் வலியுறுத்திய நெறிமுறைகள் இனியவாழ்வுக்கும் நற்பேற்றுக்கும் இன்றியமையாததாகும்.

திருவள்ளுவர் இல்லறவியலில் பொறையுடைமை என்னும் அதிகாரத்தில் இல்லறத்தானையும் துறவறத்தானையும் ஒப்பிட்டு ஒரு குறளில் இல்வாழ்வானின் வாழ்க்கை அருந்தவமாக அமைவதை விளக்குகின்றார்.

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின்" என்னும் குறள் சிந்தனைக்குரியதாகும்.

தவமுயற்சி உடையவர் உடல் உபாதைகளைப் புறந்தள்ளுவர். அவற்றின் தாக்கம் அவர்களை ஒன்றும் செய்ய இயலாது. பசியும் பொறிகளும் கூட செயலற்றுப் போகும். அத்தகைய ஆளுமை உடையவர்களாகத் தவத்தோர் விளங்குவர். காரணம் இல்லாமல் அறியாமையால் அறிவிலார் இகழ்ந்து சொல்லும் தீய சொற்களைப் பொறுப்பவன் தவ ஆற்றல்களைப் பெற்ற தவமுடை அந்தணருக்கும் மேலாவான் எனக் குறிப்பிடுகின்றார். இங்கு நோற்றல் இருவருக்கும் பொதுவாகும். நோற்றலினால் யான் என்னும் உடம்பின் மேல் உள்ள பற்று நீங்கும். உடம்பும் மிகையான பின்பு எனது என்னும் புறப்பற்றும் புளியம் பழத்தின் ஓடு போல நீங்கும். பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பவருக்கு உடம்பைப் பார்க்க மானமானது எல்லாருங் கனமாக எண்ணுகிறதினால் உடம்பை வாதிக்கிற பசியைப்

பொறுக்கிறதைப் பார்க்க மானத்தைக் கெடுக்கிற பொல்லாத வார்த்தைகளைப் பொறுக்கிறது பெரியதாயிருக்கும் என்பது கருத்து எனப்பண்டை உரையாசிரியர் மல்லர் கூறும் கருத்து விளக்கம் சிந்தனைக்குரியதாகும்.

அறிவிலார் இகழ்ந்துரைக்கும் தீய சொற்கள் மனத்தில் வெப்பத்தை உண்டாக்கும். யான் எனது என்னும் உட்பகையை அறவே நீத்த அறிஞர்கள் பிறர் இகழ்ந்துரைக்கும் தீய சொற்களை அறிவினால் பெற்ற பொறை என்னும் நீரினால் வெப்பம் பரவாமல் அவிக்கமுடியும். அவர்களுடைய மன ஆற்றல், ஆன்ம வளர்ச்சி, இல்லறத்தில் இருந்து கொண்டே தாமரை இலையில் தண்ணீர் போல இவ்வுலகப் பொருள் இன்ப வாழ்க்கையை பயின்று வந்த பக்குவ நெறியினால் பெற்ற அரும்பேறாகும். அத்தகைய பேற்றையுடைய வாழ்க்கை நெறியை ஆசிரியர் தொல்காப்பியர்

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொரு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." என்பார்.

எனவே துறவிகள் செய்தல் போலவே இல்லறத்தானும் உலகியல் வாழ்க்கையில் மாடு, கன்று, மக்கள், நிலம், செல்வம் என்று பல்வேறு பேறுகளைத் துய்க்கும் காலத்தும் அறநெறி நின்று பொறையுடைமையால் உயர்ந்த தகுதியுடையவன் ஆகின்றான் என்பதை ஆசிரியர் திருவள்ளுவர் பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பாரின் பின் என்னும் தொடரில் நம்மை உய்த்து உணரவைக்கிறார்.

இல்லறத்தான் ஈகை முதலான புண்ணியங்களால் இம்மை மறுமை பேறுகளை துய்க்கலாம். நீத்தார் பெறும் பேறாகிய பிறப்பு இறப்பு ஆகிய துன்பத்திலிருந்து வீடு பேறு அடைதல் இயலாது என்பதனால் துறவிகளே பெரியவர் என்னும் கருத்துப்படத் திருவள்ளுவர் "செயற்கரிய செய்வர் பெரியர்" என்னும் தொடரில் உணர்த்துகின்றார்.

திருஞானசம்பந்தர் இத்தகைய பெரியவர்களை,

"கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையாற் தொழுது
ஏத்தும்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே"

எனக்குறிப்பிடுகின்றார். இத்தொடருக்கு உரை கண்ட மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் கற்றல் கேட்டல் உடையார் பெரியார் எனவே உபலக்கணத்தால் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கூடல் முதலியனவும் கொள்ளப் பெறும் என உரை எழுதுவார். திருஞானசம்பந்தர் காலத்தில் கற்றல் கேட்டலின் முடிந்த பயன் நிட்டை கூடல் என்று கல்வியாளர் கருதினர். திருவள்ளுவரும் கல்வியின் பயன் நிட்டை கூடி வாலறிவன் நற்றாள் தொழுதல் என்றே குறிக்கிறார். நாம் அதனை புரியாமல் சடங்குச் சமய புற வேடங்களை வழிபாடாக எடுத்துக் கொண்டோம். இக்கருத்தினை இன்னும் தெளிவாக தாயுமானவர் விளக்குகிறார்.

"கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறா வுற்பவ நோய் மாறுமோ - நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பு இறப்புபோம்"

தாயுமானவர் போன்ற தவம் செய்யும் பெரியவர்கள் கேட்டல் சிந்தித்தல், தெளிதல் எல்லாம் நிட்டை கூடல் என்னும் சாதனை பெறுதற்கு என்று உணர்ந்து வாழ்ந்தனர் அதனால் வீடு பேற்றை எய்தினர். அவரே செயற்கரிய செய்வார் அவரே பெரியார் என்னும் கருத்தே

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செயகலாதார்"

என்னும் குறளில் பொதிந்த உண்மையாகும்.

# பெயராய்வு அறிமுகம்

*டாக்டர் கி. இளங்கோவன்.*

இடங்கள், ஆட்கள் போன்றவற்றின் பெயர்கள், சொற்களாக இருப்பினும் அவைகள் மொழியின் மற்ற சொற்களிலிருந்து பல நிலைகளில் மாறுபட்டுச் சில சிறப்பியல்புகளோடு விளங்குகின்றன. இப்பெயர்கள் மொழியில் ஏற்படும் பொது மாற்றங்கட்கு உட்பட்டும் உட்படாமலும் நிற்கும் வல்லமை உடையன. மொழியிலுள்ள மற்ற சொற்களைவிட நிலைபேறுடைய இச்சொற்கள் வரலாற்றோடு நேரடித்தொடர்பு கொண்டு, பழமை எச்சங்களாக (Fossil remains of the Past) நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஆற்றலுடையன. சொற்கள் எண்ணங்களுக்கு இடந்தருகின்றன; கற்பனைக்கு இடந்தந்து, புராணம், நாட்டுக்கதைகள் ஆகியவற்றைப் படைக்கும் ஆற்றல் பெறுகின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா மொழிகளையும் எளிதில் ஊடுருவும் பொதுத்தன்மை உடையன. இவ்வாறு மொழியியல், வரலாறு, பண்பாட்டியல் நாட்டிலக்கியம் ஆகிய பலதுறைகளோடு உறவுடைய பெயர்கள், மொழியில் ஒரு கூறாக இருப்பதால் மொழியியலில் உள்ளடங்கும் இயல்பினதாக இருந்தும், சில சிறப்பியல்புகளால் பெயராய்வு (Onomastics) என்ற தனித்துறையாக வளர்ந்திருக்கிறது. ஆங்கிலத்தில் (Onomastics Sciences) என்றழைக்கப்படும் பெயராய்வு, ஆட்பெயராய்வு (Anthroponymy), இடப்பெயராய்வு (Toponymy) என்ற இரண்டாகப் பிரிகிறது.

ஆய்வின் பொருண்மையை விளக்கத் தலைப்பு ஒன்றே சாலும். இவ்வாய்வின்கண் நிகழ்த்தியுள்ள ஊர்களின் பெயர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புக்களும், பிறவும் தமிழ் ஆய்வு உலகுக்கு வருவிருந்தாகும். மேலும் தமிழ் நாட்டில் இன்றும் சில ஊர்களின் பெயர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்தும் உள்ளன. அவை மீண்டும் பாழைய நிலை எய்திப் பண்புற வேண்டும் என்பது இடப்பெயர் ஆய்வின் நோக்கும் போக்கும் ஆகும்.

கற்றவரிடமும், கல்லாதவரிடமும் இடப்பெயராய்வினைப் பற்றித் தவறான கருத்துக்கள் சில உள்ளன. இடப்பெயராய்வு என்பது ஒரு பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இதனை விளக்க சொற்பொருள் பிரிப்பதோ, கதைசொல்வதோ என்று சாதாரணமாக நினைக்கிறார்கள். அன்றியும், இப்பெயராய்வு, பயனற்ற பொழுது போக்கு என்றும் சொற்சிலம்பம் என்றும் நினைக்கிறார்கள். இத்தகைய தவறான எண்ணங்களுக்குக் காரணங்கள் உண்டு. இவ்வாய்வில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர்களின் பொழுதுபோக்கான (Entertaining) மனப்பாங்கு, இவ்வாய்வு தந்த எளிமைத் தோற்றம்; இவ்வாய்வின் முறைகளைப் பற்றிய அறிவின்மை என்பன எனலாம்.

இடப்பெயர் ஆய்வின் நோக்கம், இடப்பெயர்கள் தோன்றியதன் காரணத்தையும், அதன் உண்மைப்பொருளையும் விவரிப்பதுதான். ஆனால் இத்தகைய ஆய்வு சிலர் நினைப்பதைப் போல அத்துணை எளிதன்று. சில இடப்பெயர்களின் காரணத்தைச் சாதாரண மக்களிடமும், படித்தவரிடமும் கேட்டால் உடனே அவர்கள் அவற்றைப் பிரித்துப் பிரித்துப் பொருள் சொல்வதைப் பார்க்கிறோம். ஆனால் கூர்ந்து நோக்கினால், விளக்கத்திற்குள்ளாகும் பெயரில் தற்கால வடிவம், மூலப்பெயரின் திரிந்த வடிவமாயிருக்கும். எனவே தற்காலப் பெயர் வடிவத்திற்குக் கொடுக்கப்படும் பொருள் விளக்கம் உண்மையான மூலப்பெயரின் விளக்கமாகாது. மேலும் கொடுக்கப்படும் பொருள் அப்பெயரின் பலபொருளில் ஒன்றாக இருக்கலாம். இதுதான் இதன்பொருள் என்று துணிந்து கூற அரண் செய்யும் துணைச்சான்றுகள் தேவை. எனவே, பெயர்களின் உண்மைப்பொருளை அரிய, மூலவடிவத்தையும் உரிய துணைச் சான்றுகளையும் தேடவேண்டும். இவ்வாறு செய்யும் பொழுதுதான் இவ்வாய்வு பொழுதுபோக்கு அல்லது கதைசொல்லல் என்ற நிலை மாறி, அறிவியலோடு இணைந்த "பெயராய்" வாக மாறிவருகிறது.

இடப்பெயர் ஆய்வு - தற்கால நிலைமை

பொதுவாக, வரலாற்றுப் பழமைமிக்க ஐரோப்பிய

நாடுகளிலும், பிரிட்டனிலும், அமெரிக்காவைக் காட்டிலும், பெயராய்வுகள் நிரம்ப நடந்துள்ளன. அங்கு ஒவ்வொரு நாட்டிலும் நிலவியல் பெயர்களை நிலைப்படுத்தவும், பல்வேறு காரணங்களுக்காகவும், இடப்பெயராய்வுக் கழகங்களை, அரசுகளோ பல்கலைக்கழகங்களோ நிறுவியிருக்கின்றன. அரசு ஆதரவோடு, நாடு முழுவதும் பெரிய அளவில் அளவாய்வுகள் (Surveys) நடத்தப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன. பல்கலைக் கழகங்களில் டாக்டர் போன்ற பட்டங்களுக்காக இடப்பெயராய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாகக் கேரள, ஆந்திரப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இங்கிலாந்தில் ஆங்கில இடப்பெயராய்வுக் கழகம் 50 ஆண்டுகளில் நாட்டில் ஒவ்வொரு பகுதிக்கும் திட்டமிட்டு, ஏறக்குறைய 50 தொகுதிகளை வெளியிட்டிருக்கிறது. அதேபோல ஸ்காட்லாந்திலும் இடப்பெயராய்வுத் திட்டங்கள் தொடங்கி நடக்கின்றன. அமெரிக்காவிலுள்ள அமெரிக்கப் பெயராய்வுச் சங்கம் "Names" என்ற காலாண்டு ஆய்வு இதழை 1953லிருந்து நடத்தி வருகிறது.

1949இல் தோற்றுவிக்கப்பட்ட அனைத்துலகப் பெயராய்வுகளின் குழு (International Committee of onomastic Sciences)வில் அனைத்துலகப் பெயராய்வு மையம் (International onomastic centre) பெல்ஜியத்திலுள்ள லூவெய்ன் நகரத்தில் இருக்கிறது. இதன் நோக்கம் அனைத்துலகத்திலும் உள்ள பெயராய்வு அறிஞர்களிடையே அறிவு உறவை ஏற்படுத்துவதாகும். மேலும் பெயராய்வுகள் பற்றிய செய்திகளையும், நூல்தொகைக் குறிப்புக்களையும் தொகுத்துத்தரும் என்ற Bibliographical and information bulletin 1949லிருந்து வெளியிட்டு வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள பலமொழிப் பகுதிகளிலும் இடப்பெயராய்வுகள் மிகக் குறைவாகவே நடைபெற்றுள்ளன. அவற்றில் பலவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொட்டுவிட்டுச் செல்லும் நிலையில் எழுதப்பட்ட

உதிரிக்கட்டுரைகள் ஆகும். இலக்கியம், வரலாறு, நிலநூல் போன்ற ஆய்வுகளின் பகுதியாகப் பெயராய்வைப் பற்றி அரைகுறையாக எழுதப்பட்டவையே மிகுதி.

திராவிட மொழிகளிலும் இதேநிலைதான், கன்னட மலையாள மொழிகளில் குறிப்பிடத்தக்க விதத்தில் பெரிய ஆய்வுகள் இத்துறையில் நடக்கவில்லை. தமிழிலும் தெலுங்கிலும் சில முயற்சிகள் காணப்படுகின்றன.

தமிழில், ஆராய்ச்சியும், அறிமுகமும், சுவைநயமும் கலந்த பாணியில் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய "ஊரும் பேரும்" என்ற நூல் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்திலும் பல கட்டுரைகள் இப்பொருள் குறித்து அவர் எழுதியுள்ளார். என்ன காரணத்தாலோ அவர் இத்துறையில் முறையான கவனத்தோடு தொடர்ந்து ஈடுபடவில்லை. திரு.தி.அ.சொக்கலிங்கத்தின் எம்.லிட், ஆய்வாகிய Historic place names of Tamilakam upto 10th century A.D. திரு.ரா.பி.சேதுப்பிள்ளையின் மேற்பார்வையில் எழுதப்பட்டது. திரு.ச.ஞானமுத்துவின் அச்சிடப்படாத எம்.லிட்., ஆய்வாகிய Place name of Kerala Trivandrum district தான் முதன்முதலாக முறையியல் அடிப்படையில் தோன்றியது. கோவை மாவட்ட இடப்பெயர்களைப் பற்றித் திரு.கி.நாச்சிமுத்து ஆய்வுசெய்து அறிவர் (டாக்டர்) பட்டம் பெற்றார். தமிழ் இலக்கியம், கல்வெட்டு போன்றவைகளில் உள்ள பெயர்களை அடையாளம் காணுவது போன்ற காரணங்களாகத் தமிழ் ஆய்வின் தொடக்க காலத்தில் சில முயற்சிகள் நடந்துள்ளன. அவற்றில் சேரர் கருவூர் கொங்கு நாட்டிலுள்ளதா, கேரளத்திலுள்ளதா என்ற விவாதம் குறிப்பிடத்தக்கது. கேரளக்கட்சியை வற்புறுத்தித் திரு.எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் "சேரன் வஞ்சி" என்ற நூலையும் கொங்குநாடுக் கட்சிக்காகத் திரு.ரா.இராகவையங்கார் "வஞ்சி மாநகரம்" என்ற நூலையும் எழுதினார்கள். சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள் என்ற நூல், பட்டயப் பெயர்களை ஆய்கிறது. இதே போல முகவை மாவட்டத்தின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டதாகச் "சேது நாடும் தமிழும்" என்னும் நூல் இயங்குகின்றது.

தமிழ்த் தொடர்புள்ள இலங்கையிலும், மலேசியாவிலும் பெயர் ஆய்வு பற்றிய சில வெளியீடுகள் காணப்படுகின்றன. தமிழ், சிங்களக்கூறுகளை இனங்காணப் பெயராய்வினைப் பயன்படுத்தும் முயற்சி இலங்கையிலும், இந்தியச் செல்வாக்கைக் காணும் முயற்சி மலேசியாவிலும் காணப்படுகின்றன.

இடப்பெயராய்விற்கு, வரலாற்று ஆய்வியல் முறை (Historical method), அளவாய்வு முறை (survey of criptive Method) என்ற இருமுறைகள் இவ்வாய்வில் மேற்கொள்ளப்படும். குறிப்பாகச் சிறிய நிலையிலான ஆய்வு (Small Scale Survey) என்ற பகுப்பால் இவ்விடப்பெயர் ஆய்வினைத் தொடங்க வேண்டியிருக்கும். இவ்வாய்வில் வினா நிரல்பட்டியல், பேட்டி போன்ற சில முறைகளையும் கையாள வேண்டியதிருக்கும்.

இடப்பெயராய்வின் முறைகளைக் கீழ்க்கண்ட ஐந்து நிலைகளாகப் பகுத்துக்கொண்டு விளக்கலாம். அவை முறையே:

1. இடப்பெயர்களைத் திரட்டல்
2. சான்றுச் செய்திகளைத் திரட்டல்
3. அடையாளம் காணுதல்
4. விளக்கம் செய்தல்
5. வெளியிடுதல் என்பனவாம்.

*1. பெயராய்வின் முதல்நிலை:*

இடப்பெயர்கள் என்னும் பொழுது சிற்றூர், பேரூர், நகரங்களுள்ளிட்ட ஊர்களின் பெயர்கள், மலை, ஆறு, குளம் ஆகியவற்றின் பெயர்கள் போன்ற பெரும் பெயர்களும் (major names), தெரு, வீடு, பொதுவிடம், வயல், மேய்ச்சல் நிலம், ஏரி, கால்வாய் போன்ற சிறுபெயர்களும் (minor names) அடங்கும். இவைகள்

1. வழக்கிலும், எழுத்துச்சான்றிலும் உள்ள பெயர்கள்
2. வழக்கில் மட்டும் உள்ளவை. எழுத்துச்சான்றில் இல்லாத பெயர்கள்.
3. வழக்கில்லாமல் மறைந்துபோன, எழுத்துச் சான்றுகளில் மட்டும் உள்ள பெயர்கள்.

என மூன்று வகையாக அமைந்திருந்தன.

மூன்றாம் வகைப்பெயர்களை, நடைமுறையிலுள்ள அரசுப்பதிவேடுகள், வரைபடங்கள், மற்றும் கல்வெட்டு, பட்டயம் போன்ற பழமைச்சான்றுகளிலிருந்து திரட்ட முதலில் வாய்ப்புக்கள் உள. இரண்டாம்வகைப் பெயர்கள் நேரடியாகச் சென்றும் உரிய ஆட்களை அமர்த்தியும் திரட்டப்பட வேண்டியதிருக்கும்.

*2. இரண்டாம் நிலை:*

பெயர் விளக்கத்திற்குத் தேவையான செய்திகளைத் திரட்டுவது பெயர்கள் தோன்றிய காலத்திலிருந்து ஒலித்திரிபு போன்ற அகக்காரணங்களாலும், அரசியல் சமயம் போன்ற புறக்காரணங்களாலும் உருமாறிக் கொண்டே வருவன இயற்பெயராகும். இம்மாற்றங்களை விளக்குதற்குரிய பெயர்களில் திரிபு வடிவங்கள், மற்றும் உள்ளபிற சான்றுகள் முதலியவற்றைக் கல்வெட்டு, இலக்கியம், வரலாறு போன்றவைகளிலிருந்து திரட்ட வேண்டியதிருக்கும். இப்படி எழுத்துச்சான்றுகளைத் திரட்டுவது போல வாய்மொழிச் சான்றுகளையும் திரட்டுவது இன்றியமையாதனவாய் இருக்கும். பெயர்களில் தற்கால வழக்க வடிவங்கள் மற்றும் கதைகள், பாமரச் சொற்பொருள் விளக்கங்கள் ஆகியவைகளையும் நேரில் சென்று திரட்ட வேண்டியதிருக்கும். மேலும் பெயர் விளக்கத்திற்குத் தேவையான இயற்கை அமைப்புப் போன்ற செய்திகளையும் நேரில் சுற்றிப்பார்த்துச் சேகரிக்க வேண்டியதிருக்கும்.

*3. அடையாளம் காணுதல்:*

இப்பணி வரலாற்று உணர்வு உடையவர்கள் செயல்படவேண்டிய ஒன்று. பழைய எழுத்துச் சான்றுகளிலிருந்து திரட்டும் பெயர்களின் தற்கால வடிவையும், தற்கால வடிவத்தில் பழைய வடிவங்களையும் அடையாளம் கண்டுபிடித்தலும், இப்பணியில் முக்கியமாய்த் திகழ்வன.

4. பெயர்களின் உண்மைப்பொருளையும், அது தோன்றியதன் காரணத்தையும் விளக்குதலே, இவ்வாய்வு நிலையின் இறுதியாகும். முதல் மூன்று நிலைகளும் இன்றிப் பொருள்

விளக்கம் செய்ய முயல்வது, கதை சொல்வது அல்லது புராணம் கட்டுவது போன்றதாகும். விளக்குதல் என்பது உண்மையில் சொற்பொருள் விளக்கம் செய்தலேயாகும்.

முதலாவதாக, இடப்பெயர்களின் உண்மையான மூலவடிவத்தை உறுதிப்படுத்தல், காலவாரியாகத் திரட்டிய பெயரின் பல்வேறு வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு மீட்டுக் கொடுத்தல் ஆகிய இவ்விரு வேலைகளையும் செய்துகொண்டு வரலாற்று மொழியியலின் விதிக்குட்பட்டே செயல்பட வேண்டியதிருக்கும். இங்கு, ஒலியனியல் உருபனியல், பொருளனியல் மாற்றங்களைப் பற்றிய விதிகளே மேல்வரிச் சட்டங்களாப் பயன்படும். சான்றாகக் கீழக்கரை என்பது மொழியியல் அடிப்படையில் கிழக்கு+கரை =கிழக்குக்கரை> கீழ்க்கரை>கீழக்கரை என்று மாறி வழங்குவதைக் கூறலாம்.

சிலவகையான பெயர்களில், மூலவடிவங்களை அறிதலிலும், மூலவடிவங்கள் தெரிந்தாலும் அவற்றில் பல்வேறு பகுதிவிகுதிகளையும், பொருளையும் பிரித்து அறிதலிலும் சிக்கல் ஏற்படுவதுண்டு. அப்பொழுது ஒத்த பல பெயர்களை ஒரேமொழியிலும், இனமொழியிலும் உள்ளவற்றை எடுத்து நோக்கும்போது தெளிவு பிறப்பதுண்டு.

மேலும் பெயர்களின் தோற்றத்தை அறிய மொழியியல் அல்லாத பிறதுறையறிவுகளும் தேவைப்படும். பெயர்களின் பின்புலங்களை (பின் ஒட்டுக்கள்) அறிய அப்பகுதியில் வாழும் மக்கள் பேசும் மொழிகள், வழக்கியல்புகள் மட்டுமின்றி, அதன் வரலாறு, வாழும் இனங்கள், சாதி, சமயப் பிரிவுகள், பழக்கவழக்கங்கள், புராணக்கதைகள், மரபுக்கதைகள், செவிவழிச் செய்திகள் ஆகியவைகளையும் பயன்படுத்த வேண்டியதிருக்கும் இவைகள் எல்லாம் பெயர்பெற்ற காரணங்களை நுணுகி ஆராயும்பொழுது மேற்குறிப்பிட்ட பல செய்திகளின் அடிப்படையாலேயே உணர்ந்து அறியமுடியும்.

பொருள் விளக்கம் செய்யும்பொழுது சான்றுகட்கு, உட்பட்டு, காரணகாரிய முறையிலேயே செய்கிறோம். சான்றுகள் இல்லாத பொழுது வெற்று ஊகங்களில் ஈடுபடாது, விளங்கவில்லை என்றே

கூறிவிடுகிறோம். இதுவே, இத்தகு ஆய்வில் நேர்மையான வழியாகும்; இல்லை என்றால், பிற்காலத்தில் ஆய்வு செய்பவர்களுக்குக் குழப்பத்தையும், தெளிவில்லாமையையும் செய்துவிடும்.

பொதுவாகப் பெயர்க்காரணங்களை ஆராயும் பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய முதல்வேலை, அவைகளை வகைப்படுத்துதல் ஆகும். வகைப்படுத்துதல் என்பது, பெயர்களைக் காலவாரியாகவோ, இடவாரியாகவோ, பெயரமைப்பு முறை அல்லது பெயர்க்கூறுகளின் பகுதிவிகுதிகளின் அடிப்படையிலோ, இன்னும் இவை போன்ற வேறு ஏதாவது அடிப்படையிலோ பெயர்களைப் பாகுபாடு செய்து பல வகையாகப் பிரிக்கலாம்.

5) வெளியீடு என்பது தமிழியல் துறையில் மிகவும் குறைவு. எனவே, இனிவரும் காலங்களிலாவது, முறையான ஆய்வுகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வெளியிட வேண்டும். குறிப்பாக, இப்புதிய முறையில் உருவாகி வரும் இப்பெயராய்வுகளின் முடிவாகப் பெரும் பெயர்களடங்கிய அகராதிகள் வெளியிடவேண்டும்.

இப்பெயர் ஆய்வினால் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் யாது பயன் என்று சிலர் வினாவுகிறார்கள். அதற்கு விடைகூறுதல் நன்று.

மொழியில் பெயராய்வால், மொழியியல், ஒலியனியல், உருபனியல், பொருளனியல் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் வட்டாரவழக்கு மாறுபாடுகளையும் அறியமுடியும். பெயராய்வு அகராதி தயாரிப்புக்கும் உதவிசெய்யும் பெயரமைப்பு முறைகளையும் இவ்வாய்வால் அறியலாம்.

காட்டாகச் சூரலூர்>சூலூர் எனத் திரிவதை வைத்துக் கொண்டுமொழியிடை ரகர வீழ்வு என்ற ஒலியனியல் விதியை உருவாக்கலாம். புத்தூர் (1-6 நூற்றாண்டு வரை) புதூர் (6-8 நூ), புதுவூர் (14 நூ), புதூர் (16நூ, பிறகு) போன்ற வடிவங்களைக் காலவாரியாக நோக்கும் பொழுது நூற்றாண்டுகள் தோறும் ஏற்பட்ட உருபனியல் மாற்றங்களை அறியமுடிகிறது.

படைமுகாமைக் குறித்த பாளையம், கால்நடைகள் அடைக்கப்படும் இடத்தை உணர்த்தும் பட்டி, கோட்டையைச் சுட்டும்புரம் போன்ற சொற்கள் எவ்வாறு தனிநிலையில் சொற்களாக இருந்து ஊர்ப்பெயர் விகுதிகளாக மாறின என்பதை ஆராய்ந்தால் மொழியில் ஏற்பட்ட பொருள் பிரிவுகளையும் மாற்றங்களையும் காண இயலும் என்கிறார் டாக்டர்.கி.நாச்சிமுத்து.

வரலாற்றிற்குப் பெயராய்வும் ஒரு துணைச்சான்றாக நின்று உதவுகிறது. சில சமயங்களில் இது மட்டுமே பல செய்திகளைத் தரும் தனிச்சான்றாகவும் அமையும். இவை வாலாற்றில் பழங்காலத்தில் எவ்வெப்பகுதியில் எவ்வெவ்வினங்கள் வாழ்ந்தன என்பதை இடப்பெயர்களைக் கொண்டு அறியமுடியும். வாழ்ந்து எவ்விதச்சுவடும் இல்லாமல் மறைந்துபோன இனங்களைப் பற்றியும் அறியலாம். காட்டாக, இலங்கையில் தமிழ்பேசும் வடபகுதியில் காணப்படும் சிங்கள ஊர்ப்பெயர்களும், சிங்களம் பேசும்தென்பகுதியில் உள்ள தமிழ்ப்பெயர்களும் பண்டு அப்பகுதிகளில் சிங்களரும், தமிழரும் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன.

சமய வரலாற்றை அறியவும் பெயர்கள் உதவுகின்றன. பள்ளி, பாழி போன்றவை சமணபெளத்தத் தொடர்பையும், மங்கலம் போன்றவை வைதிக சமயத் தொடர்பையும் காட்டுகின்றன. ஊர்களிலுள்ள; திரு என்ற அடைமொழி பக்திக்கால நிலையை உணர்த்துகின்றன. அரசியல் வரலாற்றில் சேர, பாண்டிய, பல்லவ ஓய்கள; நாயக்க, முசுலீம் அரசுகளின் தொடர்பை முறையே இரும்பொறை, சோழமாதேவி, வீரபாண்டி, மகேந்திரவாடி, தனநாயக்கன் கோட்டை, கொத்தல்ரேவு, வாலாஜாபாத் போன்ற பெயர்கள் காட்டுகின்றன என்பது டாக்டர்.சி.நாச்சிமுத்துவின் கருத்தாகும்.

பெயர்களும் ஒருவகையில் புதைபொருட்களே. புதைபொருட்களைப் போலவே, பழைய இடப்பெயர்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கிலிருக்கின்றன; எனவே, அவை புதைபொருட்களைப் போல வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிக் கூறும் வல்லமையுடையன. இதனால்தான் தொல்பொருளாய்விற்கு இடப்பெயராய்வு

பலவகையில் துணையாக அமைகிறது என்கிறார் மேலைநாட்டறிஞர் F.T.வெயின்விட்.

தென்னிந்திய வரலாற்றில் சிக்கல் நிறைந்த பெருங்கற்காலப் பண்பாட்டை (Megalithic culture) ஆய்பவர்கள் பெயர்ச் சான்றுகளால் பல செய்திகளை உறுதிப்படுத்த முனைவதைக் காணலாம். அங்காடி, படை (பட்டடை) போன்ற ஊர்ப்பெயர் விகுதிகள் பெருங்கற்காலச் சின்னங்கள் இருந்த இடங்களைக் குறிக்கும் என்பார் அறிஞர் K.R.சீனிவாசகன்.

திராவிடர்க்கும், மேற்காசியா, ஐரோப்பா, முதலிய இடங்கட்கும் உள்ள தொடர்பைப் பேசுபவர்கள் ஊர்ப்பெயர்களை ஒப்பிட்டுக் காட்டுவர் என்கிறார் N.வாகுவெரி. மொகஞ்சதாரோ நாகரிகத்தையும், அதற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட இருண்டகால இந்திய வரலாற்றையும் அறிய இந்தியா முழுமையுமுள்ள பெயராய்வு துணை செய்யக்கூடும்.

வரலாற்றுக்காலப் புதைபொருளாய்விலும், மறைந்துபோன நகரங்கள் இருந்த இடங்களைத் தற்காலத்திய பெயர் வடிவங்களை வைத்தே கண்டுபிடித்துத் தோண்டிப் பார்க்கிறோம். காட்டாகப் புகார், கொடுங்கல்லூர் ஆகிய இடங்களில் நடந்த புதைபொருளாய்வுகளைக் குறிப்பிடலாம்.

பழங்காலத்தில் இயற்கையாக எழுந்த இடப்பெயர்கள் இயற்கை அமைப்புகளைக் கொண்டே எழுந்தன. எனவே பெயராய்வால், இயற்கை நில அமைப்புக்களைப் பற்றி அறிய முடியும். தமிழ் இலக்கியம் ஐவகை நிலங்களுக்கேற்ற பெயர்களைப் பேசுகிறது. ஆனால் அவ்வரையறைகள் எல்லாம் மயங்கிக் கிடப்பதையும் பார்க்கிறோம். இதற்குக் காலந்தோறும் ஏற்பட்ட நில அமைப்பு மாறுபாடுகள் காரணமாகலாம். சான்றாக கழிப்பாலை என்ற ஊரிருக்குமிடத்தில் அப்பெயர் சுட்டுவதைப் போல எதுவுமில்லை. ஒருகாலத்தில் கடல் அதன் அருகிலிருந்து பின் வாங்கியிருக்கலாம். ஊர்களின் பெயர்களைச் சுற்றி, மக்களின் பழைய நினைவுகளையோ, எண்ணங்களையோ வெளிப்படுத்தும், நாட்டுக்கதைகளும், தலபுராணங்களும்

எழுகின்றன. இவை நாட்டிலக்கிய ஆய்வாளர்க்குப் பல செய்திகளைத் தரும். பெயர்களைப் பற்றிய கதைகள் தலபுராணம் என்னும் இலக்கிய வகையாக மலர்ந்து இலக்கியத்தை வளம்படுத்தியிருக்கின்றன. எனவே பெயராய்வு இலக்கியத்திற்கும் பயன்படுகிறது.

பெயர்களை வகைப்படுத்தல், அதன் அடிப்படையில் பரப்பு வரைபடங்கள் தயாரித்தல் ஆகியவற்றின் அடிப்படையில், பண்பாட்டுக் கூறுகள் தோன்றிப் பரவுதலை ஆய்வதைப் போல, ஒரு குறிப்பிட்ட பெயர்க்கூறு எங்குத் தோன்றி, எப்படிப் பரவியது என்பதைக் காணலாம். இதைக் கொண்டு மக்களின் குடியிருப்பு முறைகள், குடியேற்றத்தில் வளர்ச்சி, வேகம் முதலியவற்றைப் பற்றி ஊகிக்கலாம். காட்டாகக் கோவை மாவட்டத்தில் 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வட கிழக்குப் பகுதியில் பாளையம் விகுதியுடைய பெயர் மிகுதியாகத் தோன்றி, மேற்கு நோக்கி 18ஆம் நூற்றாண்டுவரை பரவியிருந்தாலும், 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு "பட்டி" பெயர் விகுதி தென்மேற்குப் பகுதியிலும், "வலசு" விகுதி வடகிழக்குப் பகுதியிலும் மிகுதியாகக் காணப்படுவதும், மூன்று திசைகளிலும் அவ்வக்காலங்களில் நடந்த கன்னட, தெலுங்கு, தமிழ்க் குடியேற்றங்களைக் காட்டுகின்றன.

பெயர்களை வகைப்படுத்தலின் மூலம், பலநாட்டு, இனமொழிக் கூறுகளோடு ஒப்பிட்டாய்ந்து, உலகளாவிய ஒற்றுமை வேற்றுமைகளைக் சுட்டிக்காட்ட இயலும். இடப் பெயராய்வுகளின் துணையால், சரியான நிலநூல் பெயர்களை நிலைப்படுத்த முடியும். இந்நோக்கத்தோடு, சில மேநாடுகளில் இடப்பெயராய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நாமும் ஆய்வுகள் பல நடத்தி ஊர்ப்பெயர் ஆய்வுகளை மேலோங்கச் செய்வோம்.

ஆக்கம்:-

பேராசிரியர். கி.இளங்கோவன் எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர் (முன்னாள்),
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

# திரை மறைவில் நாடகப் படைப்பாளர்கள்

*முனைவர். அ.சிவக்கண்ணன்*

தமிழ் நாடகம் பற்றி அறியவேண்டும் என்றால் சங்க இலக்கியத்தில் கிடைக்கும் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டே ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டியுள்ளது. பண்டைத் தமிழரின் கூத்துக்கலையே, இன்றைய நாடகங்களின் வரலாற்று முதன்மைபெற்ற ஆவணம் எனலாம். கூத்து, ஆடலும் பாடலும் இணைந்த நிகழ்கலை. மக்கள் சார்ந்த கலையாகவும் இது திகழ்ந்தது. இக்கூத்து என்ற பெயரே நாடகத்திற்கும் ஆகிவந்தது என்பதனை, 'கூத்தாடி' 'கூத்துப் பார்க்கலாம்' 'கூத்தாடாதே' போன்ற சொல் வழக்குகளால் அறியலாம். 'தெருக்கூத்து' என்பது இன்றும் நிகழ்ந்து வரும் கலையாகும்.

காலந்தோறும் பல்வேறு காரணங்களால், பண்டைக் கலைகள் எல்லாவற்றிலும் ஏற்பட்டமாற்றங்கள் கூத்துக் கலையிலும் நிகழ்ந்ததன் விளைவுதான் நாம் இன்று காணும் மேடை நாடகம்.

பல்வேறு பண்பாட்டுக் கலப்புக்கள், படையெடுப்புக்கள், ஆட்சிமுறை மாற்றங்கள் போன்றவற்றின் தாக்கம் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்டதன் விளைவே நிகழ் கலைகளின் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டதற்கான காரணம் எனலாம்.

நாடகத்திற்கு இன்றியமையாதது நல்ல நாடகப் பாடம் (Text). இது செம்மையாக அமைவதைப் பொருத்துத்தான் மேடையில், பார்வையாளருக்கு ஒரு சுவையான நாடகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. ஆனால் நாடகம் எழுதும் எல்லோருமே மேடையை மனத்தில் கொண்டு எழுதுவதில்லை. அதிலும், ஒருதுறையில் புலமை வாய்ந்தவராகக் கருதப்படும் ஒரு படைப்பாளி, நாடகம் எனும் இலக்கிய வகையையும் தம்முடைய படைப்புக்குரிய சாதனமாகக் கருதி நாடகங்களைப் படைத்திருப்பதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நாவலாசிரியராக நன்கறியப்பட்ட அ.மாதவையா, 'புரட்சிக் கவிஞர்' என்று போற்றப்படும் பாரதிதாசன் 'சிறுகதை மன்னன்'

என்று புகழ்ந்துரைக்கப்படும் புதுமைப்பித்தன் போன்றோரைக் கூறலாம். தங்களுக்கே உரிய, பழகிப்போன துறையினின்றும் விலகி நாடகம் படைப்பதில் இவர்கள் நாட்டம் கொண்டதற்குக் காரணம் என்ன?

தாங்கள் சொல்லவிரும்பிய கருத்தினை, விளக்கியுரைக்க நாடகம் எனும் இலக்கிய வகையே பொருத்தமானதாக இருக்க முடியும் என்று அவர்கள் கொண்ட நம்பிக்கைதான் தங்கள் படைப்பின் கருவிற்கேற்ற வடிவத்தையும் இலக்கிய வகைமையையும் தேர்ந்தெடுக்கும் உரிமை எந்த ஒரு படைப்பாளிக்கும் உண்டுதானே!

இத்தகைய படைப்பினை உருவாக்கும் போது, நாடகத்தில் கருத்திற்கு முதலிடம் தருவதால், படைப்பாளிகளுக்கு நாடக மேடையைப்பற்றிய நினைவு இருந்திருக்குமா என்பது சந்தேகமே!

'மனோன்மணியம்' நாடக ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தம் நாடகத்தை நடிப்பதற்காக எழுதவில்லை என்று சுட்டிக்காட்டியிருப்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

இதனால்தான் நாடக இலக்கியத்தை, படிப்பதற்குரியது என்றும் நடிப்பதற்குரியது என்றும் பிரித்து வைத்தனரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த இருவகை நாடகங்களுக்கும் இடையில் ஒரு மெல்லிய கோடே பிரிக்கும் பணியைச் செய்கிறது. ஏனென்றால் மேடை நாடகங்கள் பலவும் அச்சில் நூலாக வரும்போது அவை படிப்பதற்கும் உரியனவாக மாறுகின்றன. அதே போன்று, நல்லதொரு மேடைக் கலைஞனின் பார்வையில் படும் படிப்பதற்குரிய நாடகமும் நடிப்பதற்குரிய நாடகமாக மாறும் என்பதையும் மறுத்தற்கில்லை. 'மனோன்மணியம்' நாடகம் பின்னாளில் திரைப்படமாகவே எடுக்கப்பட்டது இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமையும்.

படிப்பதற்குரிய நாடகங்கள் ஒருதனி இலக்கிய வகையாக மதிப்பீடு செய்யப்பட்டு, மேலை நாடுகளில் இன்றளவும் போற்றிப்

பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழில் நாம் கடந்த காலத்தில் பல தொன்மையான நாடக நூல்களை இழந்து விட்டிருந்தும் அதற்காகக் கவலை கொள்ளாது, இப்போது கிடைத்திருப்பவற்றையும் பாதுகாக்க முயலாது, பழம்பெருமை பேசுவதிலேயே சுவைகொண்டு இருக்கிறோம்.

இந்தப் பின்னணியில் இங்கு மூன்று எழுத்தாளர்களின் நாடகப்படைப்புக்களை, பார்வைக்கு எடுத்துக் கொள்கிறோம்.

முதலாவதாக, அ.மாதவையா எழுதிய 'திருமலை சேதுபதி' எனும் நாடகம்.

இரண்டாவதாக, ஆங்கிலப் பேராசிரியரான அ.சீநிவாசராகவன் எழுதிய 'நிகும்பலை' எனும் தொகுப்பில் அமைந்த நான்கு நாடகங்கள்.

மூன்றாவதாக, ஜெயகாந்தன் எழுதிய 'பலவீனம்' எனும் நாடகம்.

### அ.மாதவையாவின் 'திருமலை சேதுபதி' நாடகம்

மாதவையா பாரதியார் பிறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் அதாவது 1872ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினாறாம் நாள் திருநெல்வேலி மாவட்டம், பெருங்குளம் எனும் கிராமத்தில் பிறந்தார். சென்னை, கிறித்தவக் கல்லூரியில் எம்.ஏ., வரை பயின்று அரசாங்க, உப்பு சுங்க இலாகாவில் அதிகாரியாகப் பணியாற்றினார். 1925ஆம் ஆண்டு அக்டோபர் 22ஆம் நாள், சென்னைப்பல்கலைக் கழக செனட்சபையில் தமிழைப்பற்றி உயர்வாகப் பேசிமுடித்து அமர்ந்தபோது அவர் உயிர்பிரிந்தது.

நமக்குக் கிடைத்திருக்கும் சான்றாதாரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது மாதவையா எழுதியதாக இந்த ஒரு நாடகம் மட்டுமே கிடைத்துள்ளது.

'திருமலை சேதுபதி' ஒரு தமிழ் நாடகம் என்று தலைப்பில் சுட்டப்பட்டிருந்தாலும், முன்னுரையில் "இந்நாடகம் தமிழ்நாட்டுச் சரித்திரத்தைத் தழுவியதன்று; இஸ்பானிய நாட்டுப் புராதான சரித்திரத்தில் கூறப்படும் விருத்தாந்தம் ஒன்று கால

ஆட்சியையும் புறக்கணித்து மக்களை அவல நிலைக்கு ஆளாக்குகிறான்.

சோழ மன்னரின் தூதுவராக வரும் அச்சுத முதலியாரை அரசவைக் கோமாளி முக்கிய மந்திரியின் தூண்டுதலால் அவைக்களத்திலேயே அடித்து அவமானப்படுத்துகிறான். இதனால் போர்மூளும் நிலை ஏற்படுகிறது.

திருவேங்கட மாறனின் தம்பி வம்சாரி மாறன் பெண்பித்தன். தீய குணங்கள் அத்தனையும் ஒருங்கே கொண்டு உருவானவன். திருவேங்கடமாறனின் அடுத்த வாரிசாக ஆட்சியைப் பிடிக்க நினைக்கிறவன்.

பாண்டிய மன்னனின் ஆட்சிக்குட்பட்டு, சேதுக்கரையை ஆண்டுவரும் திருமலை சேதுபதி வீரமும் விவேகமும் மிக்கவனாய் பாண்டிய மன்னனிடம் மிக்க விசுவாசம் கொண்டவனாய்ப் படைக்கப்பட்டிருக்கிறான். மன்னனின் நிலைமையையும் அவனை ஆட்டிப் படைப்பவர்களின் சூழ்ச்சியையும் அறிந்திருந்தாலும் மன்னனை அதனின்றும் மீட்க இயலாதவனாய் இருக்கின்றான். சேரநாடு கப்பம் கட்ட மறுப்பதால் சேர நாட்டுக்கும் பாண்டிய நாட்டுக்கும், போர் மூள்கிறது. போருக்குச் செலவழிக்கப் போதுமான பொருளை மன்னன் தரஇயலாததால், திருமலை சேதுபதி தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டின் சில பகுதியை செட்டிமாரிடம் அடகுவைத்துப் பணம் பெற்று, போர்ச் செலவுக்கு ஏற்பாடு செய்கிறான். இவனுடைய இத்தகைய உயர்ந்த பண்புகளால்தான், மாதவையா, நாடகப் பாத்திரங்களின் பெயர்ப் பட்டியலில் திருமலைசேதுபதி எனும் பெயருக்கெதிரே 'நாடகத் தலைவன்' என்று குறிப்பிட்டிருக்கிறார் போலும்.

(தொடரும்)

பதிப்பாசிரியர்
இரா.சதாசிவம்
மருதுபாண்டியர் தெரு,
தாசில்தார் நகர், மதுரை-20.
தொலைபேசி : 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116